| | |
|---|---|
| மையம் : ____________ | பெயர்: ____________ |
| | பதிவு எண்: ____________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ____________ | நாள் : ____________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – மே–ஜூன் 2020**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

*Read the following text and answer the questions given below in a single line.* ***(5x1=5)***

ஆசிரியர்: இளம் வயதில் வேலைக்குச் செல்வதால் கதிர்வேலனது கல்வி கெடும். மூளை வளர்ச்சி குறைந்து சிந்திக்கும் ஆற்றலே இல்லாமல் போகும். எல்லாவற்றிற்கும் மேலாக அவனது உடல் நலமும் பாதிக்கும்.

வள்ளி: வேலைக்குச் செல்வதால் அவனுக்கு இத்தனை துன்பங்கள் ஏற்படுமா?

ஆசிரியர்: ஆமாம்மா தமிழ்நாட்டில் மட்டும் 8.5 இலட்சம் குழந்தைகள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்களைக் குழந்தைத் தொழிலாளர் என்பார்கள். இவர்கள் உடல் நலமும் உள்ளப் பண்பும் குன்றும் வகையில் மிகக் கடுமையாக உழைக்கின்றனர். இது கற்றவர்கள் ஆராய்ந்து அறிந்த உண்மை.

**வினாக்கள்:–**

1. கதிர்வேலனின் கல்வி எதனால் கெடும் என்று ஆசிரியர் கூறுகிறார்?

   ________________________________________________

2. கதிர்வேலனின் மூளை எவ்வாறு பாதிக்கப்படும்?

   ________________________________________________

3. வள்ளி ஆசிரியரிடம் என்ன கேட்டாள்?

-------------------------------------------------------

4. தமிழ்நாட்டில் எவ்வளவு குழந்தைத் தொழிலாளர் உள்ளனர்?

-------------------------------------------------------

5. குழந்தைத் தொழிலாளர் எவ்வாறு உழைக்கின்றனர் என ஆய்வு கூறுகிறது?

-------------------------------------------------------

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

*Read the following poem and answer the question give below in a single line.*

***(5x1=5)***

மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை;
மாதமொரு மும்மாரி வருசிக்கும் தென் மதுரை;
பஞ்சை பனாதி பரதேசி கிடையாது;
கருப்புக் கிடையாது கனத்ததொரு மதுரையிலே;
மதுரையை அடுத்தவர்கள் வாழ்வரசு பெற்றிடுவார்.

**வினாக்கள்:–**

1. எதனால் ஆனை கட்டிப் போரடிப்பர் தென்மதுரையில்?

-------------------------------------------------------

2. தென்மதுரையில் மழை வளம் எப்படி இருந்தது?

-------------------------------------------------------

3. எத்தகைய மக்களை மதுரையில் காணமுடியாது?

-------------------------------------------------------

4. கனத்ததொரு மதுரையில் இல்லாதது யாது?

-------------------------------------------------------

5. மதுரையைச் சேர்ந்தவர்கள் எத்தகைய வாழ்க்கையைப் பெறுவர்?

-------------------------------------------------------

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க:–.**

*Write meaningful sentences with the following words.* ***(5x2=10)***

1. பூங்கா

-------------------------------------------------------

-------------------------------------------------------

2. கலம்

-------------------------------------------------------

-------------------------------------------------------

3. முயற்சி

-------------------------------------------------------

-------------------------------------------------------

4. அபராதம்

-------------------------------------------------------

-------------------------------------------------------

5. நூற்றாண்டு

_______________________________________________________

_______________________________________________________

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

*Answer any Five of the following questions in a few lines.* ***(5x4=20)***

1. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை? எவையேனும் மூன்றனுக்கு உதாரணம் தருக.
2. காயக் கண்டது, மாயக் கண்டது, சாயக் கண்டது யாவை?
3. எழில் பள்ளிக்கூடத்தில் பையனாக இருந்தபோது எவ்வாறு இருந்தான்?
4. பாம்பின் தன்மைகளாகக் காளமேகப் புலவர் கூறுவன யாவை?
5. வசந்தவல்லி பந்து ஆடும்போது அவளின் கண்கள் அசைந்த விதத்தை விவரி?
6. எப்பொழுது நம் உழைப்பின் பலனைப் பெறமுடியும் என்று திருக்குறள் கூறுகிறது?
7. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனியை அளித்தமைக்காகக் கூறும் காரணம் யாது?
8. ஐந்தாம் வேற்றுமை உருபுகள் யாவை? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
9. வினா எழுத்துக்கள் என்பவை எவை? எவையேனும் இரண்டனிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
10. பின்வருவனற்றுள் மெய்யெழுத்து இடம் பெறும் சொற்களை எடுத்து எழுதுக. ஆடு, இலை, இன்று, இணை, வென்றான், உள்ளம், படி, சொல்.

_______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

**V. பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்றுபற்றி கடிதம் எழுதுக.**
*Write a letter on any one of the given subjects.* ***(1x10=10)***

1. வியாதிகளைத் தவிர்க்கும் பொருட்டு உடல் சுத்தம் பேணுதல் குறித்து உன் நண்பனுக்கு/தோழிக்குக் கடிதம் எழுதுக.
2. புத்தகம் வாசிக்கும் நற்பழக்கத்தை நம்மிடையே உருவாக்குவதின் அவசியத்தைப் பற்றி கட்டுரை வரைக.
3. உடற்பயிற்சியின் அவசியத்தை விளக்கி உன் தங்கை/தம்பிக்குக் கடிதம் வரைக.

______________________________

______________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

______________________________

______________________________

******